# கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

## முதியோர்களுக்கான தேசிய சபை

## தேசிய முதியோர் செயலகம்

# வெற்றிடங்கள்

தேசிய முதியோர் செயலகத்தின் கீழ் உள்ள கதிர்காமம் முதியோர் இல்லத்தின் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| **பதவியின் பெயர்** | நிலையப் பொறுப்பதிகாரி - 01 பதவி |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) JM 1-1 2025- ரூபா (72,650-10X1360-18X2040-122,970) |
| **வயதெல்லை** | 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |
| **தகைமைகள்** | **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**<br>1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சமூகக் கல்வி, வர்த்தகம், வியாபார முகாமைத்துவம் அல்லது கலை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**<br>1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு 1ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>2. முதியோர் உரிமைத்துவ மேம்பாட்டு அதிகாரி (MA3) பதவியில் குறைந்தபடசம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |

| **பதவியின் பெயர்** | பெண் தாதியர் - 02 பதவிகள் |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) ரூபா 40,403 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள் (கட்டாயமான பொதுத் தகைமை)**<br>**கல்வி**<br>அ. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில்<br>i. சிங்களம் / தமிழ்<br>ii. கணிதம்<br>iii. ஆங்கில மொழி<br>எனும் பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>ஆ. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்<br>இ. பதவிக்கு விசேடத்துவமான ஏனைய தேவையான தகமைகள்<br>தாதியர் சேவை தொடர்பில் மூன்றாம் நிலை அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் 03 மாதங்களுக்குக் குறையாத முழு நேர கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்தில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>முதலுதவி வழங்குதல் தொடர்பில் மூன்றாம் நிலை அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் 03 மாதங்களுக்குக் குறையாத முழு நேர கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது வேறு அதற்குச் சமமான மட்டத்தில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.<br>**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**<br>1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக 1ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. முதியோர் உரிமைத்துவ மேம்பாட்டு அதிகாரி (MA3) பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |

| **பதவியின் பெயர்** | சாரதி - 1 பதவி |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்)ரூபா 38,387 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>**5.1.1 கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>**5.1.2. தேர்ச்சி**<br>மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வானங்கள் செலுத்துவதற்கான உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் |

| **பதவியின் பெயர்** | சமையலாளர் - 1 பதவி |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்)ரூபா 37,715 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>சமையற் கலை / உணவு தொழில்நுட்பம் தொடர்பில் மூன்றாம் நிலை அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறனில் (NVQ) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் |

| **பதவியின் பெயர்** | சமையல் உதவியாளர் - 1 பதவி |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) ரூபா 36,475 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல்<br>**தொழில்சார் தகைமைகள்**<br>சமையற்கலை தொடர்பாக 03 மாதத்திற்குக் குறையாத கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல். |

| **பதவியின் பெயர்** | ஆண் / பெண் உதவியாளர் (Attendant) - 04 பதவிகள் |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) ரூபா 36,475 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல் மற்றும் 06 மாத காலத்திற்குக் குறையாத குறித்த துறையில் (பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில்) சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் |

| **பதவியின் பெயர்** | அலுவலக உதவியாளர் - 02 பதவிகள் |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) ரூபா 36,475 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல் |

| **பதவியின் பெயர்** | பங்களா பொறுப்பாளர் - 01 பதவி |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) ரூபா 36,475 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல் அத்துடன் உணவு தயாரித்தல் தொடர்பில் 06 மாதத்திற்குக் குறையாத கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் |

| **பதவியின் பெயர்** | பல்காரிய தொழில்நுட்ப உதவியாளர் - 01 பதவி |
|---|---|
| **நியமனத்தின் தன்மை** | ஒப்பந்த அடிப்படையில், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதம் |
| **மாதாந்த சம்பளம்** | (2025-03-25ஆம் திகதிய 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) ரூபா 40,008 + வாழ்க்கைச் செலவுப்படி |
| **வயதெல்லை** | 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| **தகைமைகள்** | **தகைமைகள்**<br>மின்சாரம் மற்றும் நீர்ச்சுற்று தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். |

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

- நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிகளுக்கான நியமனம் நிரந்தரம் என்பதுடன் பெண் தாதியர், சாரதி, சமையலாளர், சமையல் உதவியாளர், பராமரிப்பு உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் விடுமுறை பங்களா பொறுப்பாளர் போன்ற பதவிகளுக்கான நியமனம் ஒப்பந்த அடிப்படையிலாகும் என்பதுடன் இரண்டு வருட ஒப்பந்த காலத்திற்கு உட்பட்டது. பதவியின் தேவைப்பாடு மற்றும் திருப்திகரமான செயற்றிறனின் அடிப்படையில் வருடாந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேவையை நீடித்துக்கொள்ளலாம்.
- அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொள்கையின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதமாகும்.
- 2000ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க முதியோர்களுக்கான உரிமைத்துவத்தைப் பாதுகாக்கும் சட்டம் மற்றும் 2011ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க முதியோர்களுக்கான உரிமைத்துவத்தைப் பாதுகாக்கும் சட்டத்தின் (திருத்தப்பட்டது) விதிமுறைகளுக்கும், அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்ட திட்ட ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.
- இந்த ஆட்சேர்ப்பானது தேசிய முதியோர் செயலகத்தின் கீழ் உள்ள கதிர்காமம் முதியோர் இல்லத்திற்காக மட்டுமே.

**ஏனைய பொதுவான விடயங்கள்**

**சகல விண்ணப்பதாரர்களும்**

- இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.
- பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு சேவை செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

**பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் முறை**

பிரசித்த விளம்பரம் அல்லது பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு ஆட்சேர்க்கப்படுவர். சமையலாளர், சமையல் உதவியாளர் மற்றும் சாரதி பதவிகளுக்கு தொழில்சார்ந்த பரீட்சையொன்று நடாத்தப்படும்.

I. இந்த சேவை பிரிவிற்கு மேற்கொள்ளப்படும் சகல நியமனங்கள் / ஆட்சேர்ப்புகளும், சேவைப் பிரிவிற்குள் பதவி உயர்வுகளும் இந்த நடைமுறையின் விதிகளின் பிரகாரம் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

I.. ஆட்சேர்ப்பின் பின் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் அது சார்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பில் நிறுவன வேலை நடைமுறைக் கோவையின் விதிமுறைகள் ஏற்புடையதாகும்.

I.. இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்கள் தொடர்பிலும் நிறுவன நடைமுறைகளின் குறியீட்டின் விதிகளை விட இதில் உள்ள விதிகள் மேலோங்கி நிற்கும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**

விண்ணப்பப் படிவத்தை நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு (nse.gov.lk) பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய அடையாள அட்டை, அனைத்து கல்விச் சான்றிதழ்கள், ஏனைய தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து 2026-03-10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர், தேசிய முதியோர் செயலகம், இரண்டாம் மாடி, ட பிரிவு, செத்சிறிபாய இரண்டாம் கட்டம், பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். நேர்முகத் தேர்வின் போது தேசிய அடையாள அட்டை மற்றும் மேற்கூறிய புகைப்படப் பிரதிகள் மூலம் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் மூலப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கத் திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சபைகளில் சேவையில் உள்ள ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை குறும் பட்டியலிடும் உரிமையை தேசிய முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். அதேபோல் மேற்கூறிய பதவிகள் அனைத்தையும் அல்லது ஒன்றை அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அளவில் ஆட்சேர்த்தல் அல்லது ஆட்சேர்க்காமல் விடும் தீர்மானத்தை முதியோர்களுக்கான தேசிய சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

சகல விதத்திலும் முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, உரிய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படாத மற்றும் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் தேசிய முதியோர் செயலகம் பொறுப்பு கூறாது.

**பணிப்பாளர்,**
**தேசிய முதியோர் செயலகம்,**
**இரண்டாம் மாடி, ட பிரிவு,**
**செத்சிறிபாய இரண்டாம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**
**2026-02-24.**